# தொழில்நுட்ப வழிகாட்டல்கள்

உற்பத்தி தொழிற்துறைகளில்
COVID-19 பரவலை கட்டுப்படுத்தல்

**v 1.0 - 21/05/2020**

# இந்த வழிகாட்டலின் நோக்கம்

உற்பத்தி தொழிற்துறைகள்/தொழிற்சாலைகள் போன்றவற்றில் பணியாற்றும் ஊழியர்கள், அவற்றின் விருந்தினர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் மத்தியில் பொருத்தமான தவிர்ப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றச் செய்வதற்கான மேலதிக கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளிப்பதாக இந்த COVID-19 வழிகாட்டல்கள் அமைந்துள்ளன.

COVID-19 தொற்று வேகமாக பரவி வரும் நிலையில், பணியாற்றுமிடத்துக்கான பிரவேசம் பாதுகாப்பானதாக அமைந்திருப்பதை உறுதி செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதுடன், இந்த தொற்றுக் காரணமாக செயற்பாடுகளை எவ்விதமான பாரதூரமான பாதிப்புகளுமின்றி மீள ஆரம்பிப்பதையும் உறுதி செய்ய வேண்டியுள்ளது. வளாகத்தினுள் வைரஸ் பரவுகின்றமை இனங்காணப்பட்டால், அதனால் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படக்கூடும்.

# இலக்கு

சுகாதார அமைச்சு மற்றும் COVID-19 பரவலை கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு நிலையம் அடங்கலாக அரசாங்க அமைப்புகளினால் COVID-19 துரித பரவலை கட்டுப்படுத்தும் பல நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன. அண்மையில் அமுலாக்கப்பட்ட முடக்க நிலை மற்றும் பகுதியளவு மீளத்திறப்பு/தவிர்ப்புகள் போன்றன வியாபாரங்கள் மற்றும் உள்ளக தேவைகளுக்கு உடனடி கட்டுப்பாட்டு தளர்வுகளை பெற்றுக் கொடுக்கக்கூடும். எவ்வாறாயினும், COVID-19 பரவலை கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுடன், கட்டிடத்தினுள் அல்லது அலுவலகத்தினுள் அவ்வாறான தொற்றுப் பரவல் தவிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பான மூலோபாய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

**அடிப்படையான இலக்குகளில் உள்ளடங்குபவை;**

- கட்டிட முகாமைத்துவம் அல்லது வசதி முகாமைத்துவத்துக்கு COVID-19 பரவலை நிர்வகிப்பது தொடர்பான செயற்பாட்டு திட்டமிடல் வழிகாட்டலை வழங்குவது.
- தொற்று தவிர்ப்பு மற்றும் தங்கியிருப்போர், ஊழியர்கள், விருந்தினர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர் அடங்கலாக கட்டிடத்தை பயன்படுத்துவோரை கட்டுப்படுத்துவது தொடர்பான முறையான வழிகாட்டல்களை வழங்குவது.

# பொது அறிவுறுத்தல்கள்

COVID-19 தொற்றிலிருந்து மக்கள் பாதிக்கப்படுவதை தவிர்க்கக்கூடிய ஒரே வழிமுறை என்பது, ஒரு நபரிலிருந்து மற்றொரு நபருக்கு அது தொற்றுவதை கட்டுப்படுத்துவதாகும். இதனை முறையான பிரத்தியேக தூய்மை, சமூக தூரப்படுத்தல் மற்றும் மேற்பரப்புகள் மற்றும் தொடுகை பகுதிகளை தொற்று நீக்கம் செய்வதனூடாக மேற்கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக, பணியிடத்தை சிறந்த நிலையில் பேணுவதற்கு பின்வரும் வழிகாட்டல்களும் உதவியாக அமைந்திருக்கும்.

- இந்த வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் அரசாங்கத்தின் ஆலோசனைகள் அல்லது காலாகாலத்தில் வெளியிடப்படும் வழிகாட்டல்களை செயற்படுத்துவதற்கு நிர்வாகம் COVID-19 செயலணி ஒன்றை நிறுவ வேண்டும்.

- தூய்மைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்கல் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான பகுதிகள், பிரதான தொடுகை பகுதிகள் போன்றவற்றை இனங்காணல், ஹான்ட் வொஷ், சவர்க்காரம் போன்ற தொற்று நீக்கிகளை பேண வேண்டிய பகுதிகளை இனங்காணல், தற்காப்பு அங்கிகள், தொற்றுநீக்கிகள் போன்றவற்றை போதியளவு கையிருப்பில் வைத்திருத்தல் மற்றும் அவை தொடர்பான அறிக்கைகளை பேணல் மற்றும் பணியாளர்கள், ஒப்பந்தக்காரர், விருந்தினர்கள் போன்றவர்களுக்கு தகவல்களை வழங்கல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இந்த அணி பொறுப்பாக செயலாற்றும்.

- COVID-19 தவிர்ப்பு மற்றும் அதிலிருந்து பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகள் மற்றும் விளக்கமளிப்புகள் நிரல்படுத்தப்பட்டு, முன்னெடுக்கப்படுவது மற்றும் அவற்றின் திறனை ஆராய்வது போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தல். இதனுடன் தொடர்புடைய சுவரொட்டிகளை தயாரித்தல், அச்சிடல் மற்றும் பொருத்தமான பகுதிகளில் காட்சிப்படுத்தல்.

- ஒவ்வொரு பணி ஆரம்பிக்கும் அட்டவணை காலப்பகுதிகளிடையே (shifts) ஒரு மணி நேர இடைவெளி பேண வேண்டும் என்பதுடன், ஊழியர்களின் உணவு இடைவேளைகளை தனித்தனியாக அறிவிப்பதனூடாக சமூக இடைவெளியை பேணுவதல்.

- ஊழியர்களின் மருத்துவ காப்புறுதி தொடர்பில் நிர்வாகம் மீளக் கவனம் செலுத்தி, அனைவரும் முறையான காப்பீட்டை பெற்றுள்ளமையை உறுதி செய்தல்.

- காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் ஊழியர்கள் வீட்டிலிருந்து வெளியேறக்கூடாது என்பதுடன் சுய தனிப்படுத்தலுக்கு தம்மை உட்படுத்தி உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடுதல்.

- வீட்டிலுள்ள எவருக்கேனும் COVID-19 தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் இருந்தால், அவர்கள் கண்டிப்பாக சமூக தூரப்படுத்தலை பேண வேண்டும் என்பதுடன் சுய தனிமைப்படுத்தலில் வீட்டில் இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரதரப்பினருக்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். (1390 அல்லது 1990).

- பெரும்பாலும் தொடுகை பாவனை அற்ற வகையில் சவர்க்காரம் மற்றும் ஹான்ட் சனிடைசர்கள் போன்றவற்றை பயன்படுத்தக்கூடிய வசதி சகல உட்பிரவேச, வெளியேறல் மற்றும் பொதுப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட வேண்டும். பொருத்தமான காலப்பகுதியில் அவற்றை மீள நிரப்புவதை உறுதி செய்ய வேண்டும். இந்தப் பகுதியில் அறிவுறுத்தல் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

- ஹான்ட் சனிடைசர்களில் ஆகக்குறைந்தது 60% அற்ககோல் காணப்பட வேண்டும். கைகளில் சனிடைசரை எடுத்து, அவை நன்கு உலரும் வகையில் கைகளின் உட்பகுதி மற்றும் வெளிப்பகுதியில் நன்றாக தேய்த்துக் கொள்ளவும். எவ்வாறாயினும், கைகள் அழுக்காக இருந்தால், முதலில் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவிய பின்னர், ஹான்ட் சனிடைசரை பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகின்றது.

- விசேடமாக மூக்கை கசக்குவது, இருமல் மற்றும் தும்மல் போன்றவற்றை தொடர்ந்து 20 செக்கன்கள் வரை கைகளை சவர்க்காரமிட்டு நன்கு கழுவிக் கொள்ளல்.

- கைகளை கழுவாமல் கண்கள், மூக்கு மற்றும் வாய் போன்ற அங்கங்களை தொட வேண்டாம்.

- ஏனையவர்களுடன் கைகுலுக்குவதை தவிர்க்கவும். மாறாக ஆயுபோவன், வணக்கம் அல்லது அஸ்-லாமு அலைக்கும் போன்ற இலங்கையின் பாரம்பரிய வணக்க முறைகளை பயன்படுத்தவும்.

- ஏனையவர்களின் பொருட்களை தொட வேண்டாம்.

- பொது இடங்களில் துப்புவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.



# COVID-19 பரவலை கட்டுப்படுத்துவதில் தொழிற்சாலை நிர்வாகத்தின் பங்களிப்பு

தொழிற்சாலை வளாகத்தினுள் பின்வரும் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் ஊழியர்களுக்கு போதியளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## தற்போதைய தேவைகளுக்கு பொருந்தக்கூடிய வகையில் தொழிற்சாலை வளாகத்தின் வசதிகளை மேம்படுத்தல்.

- கைகளை சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவக்கூடிய போதியளவு வசதியை ஏற்படுத்தல். சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவுவதற்கு மேலாக அற்ககோல்சார்ந்த சனிடைசர்கள் காணப்பட வேண்டும். கழுவுதலுக்கு மாற்றீடாக சனிடைசர் அமைந்திருக்கக்கூடாது. சகல உட்பிரவேசிப்பு பகுதிகள், வெவ்வேறு கட்டிடங்களினூடாக பிரவேசிக்கக்கூடிய பகுதிகள் அல்லது நுழைவிடங்கள், உணவகப் பகுதிகள், கழிவறைகள், சேவைப் பகுதிகள் மற்றும் பயன்பாட்டு பகுதிகள் போன்றவற்றில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- காய்ச்சல் அறிகுறிகளை கொண்ட அல்லது 37C க்கு அதிகமான உடல் வெப்பநிலை கொண்ட எவருக்கும் உட்பிரவேச அனுமதி மறுக்கப்பட வேண்டும். வெளியேறும் போதும் வெப்பநிலை அளவிடப்பட வேண்டும்.
- அரசாங்க விதிமுறைகளின் பிரகாரம் அல்லது நிர்வாகத்தின் தீர்மானத்தின் பிரகாரம், அலுவலகத்துக்கு விஜயம் செய்யும் ஊழியர்களின் எண்ணிக்கை ஆகக்குறைந்த எண்ணிக்கைக்கு குறைக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பணி ஆரம்பிக்கும் அட்டவணை (shift) காலப்பகுதிக்கிடையேயும் சமூக இடைவெளியை கவனத்தில் கொள்ள வேண்டும்.
- விருந்தினர் உட்பிரவேச அனுமதியை பிரிவின் தலைமை அதிகாரி மாத்திரம் வழங்க வேண்டும்.
- வரவேற்பு பகுதியினுள் பிரவேசிக்கும் முன்னர் அனைவரும் தமது கைகளை தொற்று நீக்கம் செய்ய வேண்டும். வரவேற்பு பகுதியில் சனிடைசர் போத்தல் பேணப்பட வேண்டும்.
- நடைசாலை, பிரவேச வாயில், வரவேற்பு பகுதி, உணவகப்பகுதி போன்ற பொது இடங்களில் ஊழியர்கள் அல்லது விருந்தினர்கள் ஒன்றுகூடுவதற்கு தடை விதிக்கப்பட வேண்டும். அவ்வாறான பகுதிகளில் பொருத்தமான அறிவுறுத்தல் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்படலாம்.
- குழுநிலை கலந்துரையாடல்கள் தவிர்க்கப்பட வேண்டும். 5 நபர்களுக்கு மேற்பட்ட அவ்வாறான எந்தவொரு கலந்துரையாடலும் அனுமதிக்கப்படக்கூடாது. எந்தவொரு ஒன்றுகூடலிலும் 1 மீற்றர் இடைவெளி கட்டாயமானதாகும்.
- அத்தியாவசியமற்ற பிரயாணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். எவரேனும் அலுவலகத்திலிருந்து வெளியேறி, உட்பிரவேசிக்க நேரிட்டால், மேலே தெரிவிக்கப்பட்ட சகல வழிமுறைகளும் பிரயோகிக்கப்பட வேண்டும்.
- உள்ளங்கையினுள், தும்முவதை தவிர்க்குமாறு நினைவூட்டவும் மாறாக கைக்குட்டை அல்லது முழங்கையை மடித்து தும்ம தெரிவிக்கலாம். அவ்வாறான வழிகாட்டல்களை வலியுறுத்தும் சுவரொட்டிகள் சகல பகுதிகளிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- இரு ஊழியர்களுக்கிடையே எப்போதும் 1 மீற்றர் இடைவெளியை பேணக்கூடிய வகையில் பணியிடப் பகுதிகளின் வடிவமைப்பு மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- உணவக பகுதியில் நபர்கள் அமர்ந்திருப்பதற்கு 1 மீற்றர் இடைவெளி ஏற்படுத்தப்பட வேண்டும். குழுநிலை உணவருந்தல்கள் அல்லது உணவருந்தலுடன் கூடிய சந்திப்புகள் தவிர்க்கப்பட வேண்டும்.
- பாரமுயர்த்தி நிலப்பகுதியில் (உட்பகுதி) நபர்கள் நிற்பதற்கான கட்டங்கள் அடையாளமிடப்பட வேண்டும் அல்லது சுய தூரப்படுத்தலை நினைவூட்டும் அறிவுறுத்தல் காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- வரிசை ஏற்படுவது தவிர்க்க முடியாத பகுதிகளில், உதாரணமாக உணவு பெறும் பகுதிகள், பாதுகாப்பு நுழைவு வாயில் பகுதி அல்லது கை கழுவும் அறை நுழைவு பகுதி போன்றவற்றில் நிலப்பகுதியில் நபர்கள் நிற்பதற்கான அடையாளங்கள் இடப்பட்டிருக்க வேண்டும்.



## ஊழியர்கள் தமது வீடுகளிலிருந்து தொழிற்சாலைக்கு பயணிக்கும் செய்யும் போது COVID-19 தொற்று பரவும் இடரை நிர்வகிப்பது.

**அலுவலகத்தினால் வழங்கப்படும் வாகனங்களில் பயணிக்கும் போது கவனிக்கப்பட வேண்டியவை:**

- பயணிப்போரின் பாதுகாப்பான தூரப்படுத்தல் மற்றும் சுகாதார கண்காணிப்பை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வாகனத்துக்கும் ஒரு நபர் நியமிக்கப்பட்டிருத்தல்.
- இந்த நபருக்கு முகக் கவசங்கள் மற்றும் கையுறைகள் போன்ற பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டிருத்தல்.
- வாகனத்தினுள் ஏறும் முன்னதாக ஊழியரின் வெப்பநிலை வாசிப்பை இந்நபர் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- எவரேனும் நபர் காய்ச்சல் (காய்ச்சல், சளி மற்றும் இருமல் போன்ற) அறிகுறிகளுடன் உடல் வெப்பநிலை 37C க்கு அதிகமாக கொண்டிருந்தால், அந்நபர் வாகனத்தில் ஏறும் அனுமதி மறுக்கப்பட வேண்டும். பயணிக்கும் ஊழியர்கள் இந்த ஏற்பாட்டுக்கு உடன்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடக்கூடாது.
- வாகனத்தினுள் அமரும் ஏற்பாடு தொடர்பான அறிவுறுத்தல் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், இதில் வாகனத்தினுள் அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை மற்றும் எந்த ஆசனத்தில் அமர வேண்டும் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்.
- வாகனத்தினுள் ஏறும் போதும் இறங்கும் போதும் சகல நபர்களும் 1 மீற்றர் சுய இடைவெளியை பேண வேண்டும்.
- பயணத்தின் போது, பயணிகள் தமது முகம், கண்கள் அல்லது வாயை தொடுவதை தவிர்க்குமாறு தொடர்ச்சியாக நினைவூட்டப்பட வேண்டும்.
- இறங்கிய பின்னர், தமது கைகளை தொற்று நீக்கம் செய்து கொள்ள அனைவருக்கும் நினைவூட்ட வேண்டும்.

**ஏனைய போக்குவரத்து முறைகள்:**

- பொது போக்குவரத்து சேவையை பயன்படுத்தும் போது அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும்.
- பொருத்தமான முகக் கவசத்தை அணிய மறக்கக்கூடாது என்பதுடன், தமது முகம், மூக்கு அல்லது வாயை தொடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

## கட்டிடங்களினுள் பிரவேசம் - முக்கியமான அம்சங்கள்

- கைகள், பாதணிகள் மற்றும் வாகன டயர்கள் போன்றவற்றை தூய்மைப்படுத்தல் தொடர்பான தெளிவான அறிவுறுத்தல்கள் மற்றும் அதற்கான வசதிகள் நுழைவாயில் பகுதியில் ஏற்படுத்தப்பட்டிருத்தல்.
- விருந்தினர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் அடங்கலாக அனைவரும் COVID-19 சுய வெளிப்பாட்டு பிரகடன படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும் (இந்தப் படிவம் வரவேற்பு பகுதியில் காணப்பட வேண்டும்). இந்த பிரகடனத்தில் குடும்ப அங்கத்தவர்களின் சுகாதார நிலை பற்றிய தகவல்களும் அடங்கியிருக்க வேண்டும். இந்த படிவங்கள் தயாரிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு வரவேற்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு பேணப்பட வேண்டும்.
- COVID-19 தொற்றுக்கான அறிகுறிகளைக் கொண்டிருக்கும் எந்தவொரு நபர், விருந்தினர்களுக்கான பிரவேசம் மற்றும் ஒப்பந்தக்காரர் (சேவையாற்றுவோர்) பிரவேசத்தை மறுத்தல். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நபர் ஆரம்பகட்ட வைத்திய பரிசோதனைகளுக்காக அருகாமையிலுள்ள வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- பிரவேசிக்கும் சகல நபர்களும் முறையான முகக்கவசங்களுடன் மாத்திரம் அனுமதிக்கப்பட வேண்டும்.
- எவ்வேளையிலும் 1 மீற்றர் சமூக இடைவெளியை பேணுவது தொடர்பான அறிவுறுத்தல் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் (கள சந்திப்புகள், தேநீர் வேளை, மதிய உணவு வேளை, நுழைவாயிலில் பிரவேசிக்கும் வேளை மற்றும் நீர் அருந்தல் அல்லது சேவை பகுதிகளில்).
- கைகளை ஆகக்குறைந்தது 20 செக்கன்கள் வரை சவர்க்காரமிட்டுக் கழுவவும். ஹான்ட் சனிடைசர்கள் (அற்ககோல் கொண்டது) சகல உட்பிரவேச பகுதிகளிலும் பேணப்பட வேண்டும்.
- வளாகத்தினுள் பிரவேசிக்கும் போது பாவனையின் பின் அழித்துவிடக்கூடிய பாதணி மேலுறைகளை வழங்குவதற்கான வசதிகள் பற்றி அல்லது பாதணி கீழ் பகுதிகளை 1% சோடியம் ஹைபோகுளோரைட் கொண்டு தொற்றுநீக்கம் செய்யும் வசதியை ஏற்படுத்துவது பற்றி கவனம் செலுத்தவும். பாதணி மேலுறைகள் பயன்படுத்தப்படின், அந்த மேலுறையை அகற்றும் போது அல்லது மாற்றும் போது பாவனையாளர்கள் தொற்றுக்குள்ளாமல் இருக்கும் வகையில் காப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## வருகைபதிவு கட்டமைப்பு

வரவை பதிவு செய்வதற்காக பயன்படும் பயோ-மெற்றிக் பதிவு (கைரேகை ஸ்கான்) தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டும்.

வரவை பதிவு செய்வதற்கான மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



## பணியாற்றும் பகுதி அல்லது பணியாற்றும் களத்தில்

- கைகளை கழுவும் மற்றும் தொற்று நீக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல்.
- உங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணியிடப் பகுதியில் அல்லது இடத்தில் மாத்திரம் கருமமாற்றல்.
- உங்கள் கணினி, பணித்தொகுதி அல்லது பணிக்கட்டமைப்பை வேறெவரும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம்.
- தனிநபர்களுக்கு வேறாக்கப்பட்ட கதிரைகள் இருக்க வேண்டும். வேறெவருடனும் பகிர வேண்டாம்.
- சகலரும் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் தொற்றுநீக்கியை கொண்டு தமது பணியிடப்பகுதி, கீபோர்ட், ஆசன கைப்பிடிப்பகுதி, இலாச்சி போன்றவற்றை தொற்றுநீக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு 2 மணிநேரத்துக்கு ஒரு தடவை தொற்றுநீக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும் அல்லது இருமல் அல்லது தும்மல் காரணமாக திரவம் வெளிப்பட்டிருந்தால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும்.
- அடிக்கடி கைகளை கழுவிக் கொள்ளவும்.
- முகம் அல்லது கண்களை தொட வேண்டாம்.
- அலுவலகம் அல்லது தொழிற்சாலையில் குழுநிலை ஒன்றுகூடல்களை தவிர்க்கவும்.
- எந்தவொரு சந்திப்பின் போதும், 1 மீற்றர் இடைவெளியை உறுதி செய்யவும்.
- உணவருந்தும் பகுதியில் குழுவாக உணவருந்துவது தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் உணவை அருந்த உங்களுக்காக தனித்து அமரக்கூடிய வகையில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதியை பயன்படுத்தவும்.

## ஆடைமாற்றும் அறைகள்

- கைகளை கழுவுவதற்கு போதியளவு நீர் மற்றும் சவர்க்கார வசதி காணப்பட வேண்டும். அற்ககோல் சேர்ந்த சனிடைசரும், நீர் மற்றும் சவர்க்கார வசதிகளுக்கு மேலாக வழங்கப்பட வேண்டும். நீர் மற்றும் சவர்க்கார வசதிக்கு மாற்றீடாக சனிடைசர் வசதி அமையக்கூடாது.
- உட்பிரவேசம் மற்றும் வெளியேறும் நேரத்தை கட்டுப்படுத்தல்.
- ஒவ்வொரு ஊழியரின் பணி ஆரம்பிக்கும் நேரத்தை பொறுத்து அவர்களுக்கான லொக்கர்கள் இருப்பிடத்தை மாற்றியமைக்கவும்.
- பணி ஆரம்பிக்கும் அட்டவணை காலப்பகுதிகளிடையே (shift) முறையான சமூக தூரப்படுத்தலை பேணவும். இது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் சுவரொட்டிகள் லொக்கர் அறை பகுதி மற்றும் ஆடை மாற்றும் பகுதியில் காட்சிப்படுத்தப்படலாம்.

## கள செயற்பாடுகளின் போது பாதுகாப்பு

- போதியளவு கைகளை கழுவும் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். கைகளை கழுவுவதற்கான வசதிக்கு மேலதிகமாக அற்ககோல் சேர்ந்த சனிடைசர் வசதியும் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- கண்டிப்பான மற்றும் வழமையான பிரத்தியேக பாதுகாப்பு அங்கிகள் அணிவதனூடாக, வாய்மூலமாக வெளியேறும் திரவத்துளிகள் அருகாமையில் பணியாற்றும் ஏனைய ஊழியர்கள் மீது படுவதை தவிர்த்துக் கொள்ளவது மற்றும் எவ்வேளையிலும் சுவாசத்தொகுதியின் தூய்மையை உறுதி செய்வது.
- நேரடியான தொடர்பாடல்களை இயலுமானவரை தவிர்த்து, மாறாக வோகி-டோகிகள் அல்லது PA சிஸ்டம்களை பயன்படுத்தல்.
- ஒன்றுக்கு மேற்பட்ட செயற்படுத்துனர் அல்லது தொழில்நுட்பவியலாளர் தேவைப்பட்டால் சமூக தூரப்படுத்தலை உறுதி செய்யவும்.
- பொது தொடுகை பகுதிகளை (உதாரணம்: வால்வு கைப்பிடிகள், கட்டுப்படுத்தல் ஆளிகள், வோகி-டோகிகள், PA சிஸ்டம்கள், தொலைபேசிகள், இலத்திரனியல் ஆளிகள், கதவு கைப்பிடிகள் மற்றும் ஹான்ட்ரெயில்கள் போன்றன) அடிக்கடி பொருத்தமான தொற்றுநீக்கி கொண்டு தொற்றுநீக்கம் செய்வது.
- கைகளால் பயன்படுத்தும் இயந்திர சாதனங்கள் மற்றும் ஊழியர்களின் தொடுகைக்கு உட்படும் இதர பகுதிகள் (உதாரணம்: மூலப்பொருள் கையாளல் சாதனம்) செயற்படுத்தப்படும் முன்னரும் செயற்படுத்திய பின்னரும் தொற்றுநீக்கப்பட்டு தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.
- பராமரிப்பு செயற்பாடுகளை தங்கியிருக்கும் திறன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது போன்ற தேவைகளுக்கான மிகவும் பொருத்தமான மற்றும் அத்தியாவசிய சாதனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தல். இடர் அடிப்படையிலான பரிசோதனை மற்றும் ஆய்வை முன்னெடுத்து தவிர்ப்பு பராமரிப்பு செயற்பாடுகளை முன்னுரிமைப்படுத்திக் கொள்ளவும்.
- கள நிலைமைகளை கண்காணிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டளவு கள நபர்கள் காணப்படும் நிலையை கவனத்தில் கொண்டு, ஸ்மார்ட் சாதனங்கள் மற்றும் கமராக்களின் பாவனையை ஊக்குவிக்கவும். அவ்வாறான கண்காணிப்பு செயற்பாடுகளை பொறுப்புள்ள ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டும்.
- காணப்படும் மட்டுப்படுத்தப்பட்டளவு ஊழியர்களை கவனத்தில் கொண்டு அவர்களுக்கு களைப்பு ஏற்படாத வகையில் எப்போதும் பணிச்சுமையை நிர்வகிக்கவும். எனவே சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு மாறாக, மிகவும் அத்தியாவசியமான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கவும்.



## கட்டுப்பாட்டறை மற்றும் தொழிற்சாலை அலுவலக பாதுகாப்பு

- கைகளை கழுவுவதற்கு சவர்க்காரம் மற்றும் நீர் ஆகிய வசதிகளுக்கு மேலாக அற்ககோல்சார்ந்த சனிடைசர் பேணப்பட வேண்டும்.
- அருகிலுள்ள ஊழியர்கள் மீது வாய்மூல திரவங்கள்படுவதை தவிர்ப்பதற்காகவும், சுவாசத் தொகுதியின் தூய்மையை பேணுவதற்கும் எப்போதும் முகக்கவசம் ஒன்றை அணியவும்.
- ஒவ்வொரு பணி ஆரம்பிக்கும் அட்டவணை காலப்பகுதியின் (Shift) முன்னரும் பின்னரும் மடிக்கணினிகள்/கணினிகள்/கட்டுபாட்டு பகுதிகளை தொற்றுநீக்கம் செய்யவும்.
- போதியளவு சமூக தூரப்படுத்தலின் பிரகாரம் (1 மீற்றர்) இருக்கை வசதிகளை ஏற்படுத்தவும்.
- ஒவ்வொரு பணி ஆரம்பிக்கும் அட்டவணை காலப்பகுதி (Shift) கடந்த பின்னரும் பணியாற்றுவதை தவிர்க்கவும்.
- சொந்த குவளைகள் மற்றும் நீர் போத்தல்களை பயன்படுத்தவும்-பொது போத்தல்கள்/குவளைகள்/கோப்பைகள் போன்றவற்றை தவிர்க்கவும். ஏனைய மேசைகள் அல்லது கதிரைகளை அநாவசியமாக தொட வேண்டாம்.
- பொது தொடுகை பகுதிகள் (மேசைகள், கணினி, கீபோர்ட், வோகி-டோகி, அச்சியந்திரங்கள், தொலைபேசி, மின்ஆளிகள், கதவு கைப்பிடிகள் போன்றவற்றை) அடிக்கடி தொற்றுநீக்கவும்.
- கடதாசிசார் அனுமதி கட்டமைப்புகளுக்கு பதிலாக ஸ்மார்ட் முறையிலான அனுமதிகளை ஊக்குவிப்பதுடன், களப்பகுதியில் கடுமையான கண்காணிப்புகளை பேணவும். அன்ரொயிட் அல்லது OS போன்ற appகளை கொண்டு மேற்படி தேவையை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.
- தகவலை அணுகல் மற்றும் தொடர்பாடல்களை பேணுவதற்கு ஒன்லைன் கட்டமைப்புகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக, சைபர்பாதுகாப்பு சம்பந்தமான இடர்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், தொடர்ந்து கண்காணிக்கப்படுவதை உறுதி செய்யவும்.
- சுகயீன விடுமுறை அல்லது சுய தனிமைப்படுத்தல் காரணமாக பணியிலில்லாத ஊழியர்களை கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு பதிலாக செயலாற்றக்கூடிய நபர்களை இனங்காணவும். களத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பணிச்சுமையை குறைக்கும் வகையில், சுய தனிமைப்படுத்தலில் இருக்கும் நபர்களை எவ்வாறு அவர்கள் இருக்கும் பகுதியிலிருந்து பணியாற்ற இணைத்துக் கொள்ளலாம் என்பது பற்றிய விடயங்களை கவனத்தில் கொள்ளவும்.
- குழு தனிமைப்படுத்தல் நிலைமைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு, அவ்வாறான நிலையில் மாற்றுக்குழுவை பணியை முன்னெடுக்க ஈடுபடுத்த தயார்நிலையில் வைத்திருத்தல்.

## ஊழியர்கள் வெளியேற தயாராகும் போது

- அவர்களின் பணிபுரியும் பகுதி தொற்றுநீக்கம் செய்யப்பட வேண்டும்.
- தமது முகக்கவசத்தை அவர்கள் அணிய வேண்டும்.
- திரும்பிச் செல்லும் பயணத்தின் போது தமது முகத்தை அல்லது கண்களை தொடக்கூடாது.
- வாகனத்திலிருந்து இறங்கிய பின்னர் தமது கைகளை தொற்றுநீக்கம் செய்து கொள்ள வேண்டும்.
- தமது வீட்டுக்குள் பிரவேசிக்கும் முன்னர், கைகளை கழுவிக்கொள்ள/தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.

## பொது பகுதிகளை பயன்படுத்தல் - ஓய்வெடுக்கும் அறைகள், வாகன தரிப்பிடப் பகுதிகள்.

- இவ்வாறான பகுதிகளில் சமூக தூரப்படுத்தலை ஊக்குவிப்பதுடன், COVID-19 உடன் தொடர்புடைய மேலதிக சுவரொட்டிகளை இப்பகுதிகளில் காட்சிப்படுத்தல்.
- போதியளவு அற்ககோல் சார் ஹான்ட் சனிடைசர்களை ஓய்வறைகளில் பேணுவதனூடாக, அப்பகுதியில் தங்கியிருப்போர் மத்தியில் கைகளின் தூய்மையை பேணுவதை ஊக்குவிக்கவும். கழிவறைகள் மற்றும் இதர பொது இடங்களில் கைகளை கழுவுவதன் முக்கியத்துவம் பற்றிய சுவரொட்டிகளை காட்சிப்படுத்தலாம்.
- தினசரி கழிவுகளை அகற்றிக் கொள்ள அங்கீகாரம் பெற்ற கழிவு அகற்றும் ஒப்பந்தக்காரர்களை ஈடுபடுத்தவும்.
- மொப்கள் மற்றும் தூய்மைப்படுத்தும் வைப்களை அடிக்கடி மாற்றிக் கொள்ள ஊக்குவிக்கவும்.
- தூய்மைப்படுத்தல் மற்றும் தொற்றுநீக்கம் போன்றன அடிக்கடி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அவை தொடர்பான பதிவுகள் அட்டவணையில் பேணப்பட வேண்டும்.
- பொது உணவுப் பகுதி, ஜிம் மற்றும் இதர உள்ளக பொழுதுபோக்கு அல்லது விளையாட்டு பகுதிகளை இந்த தொற்று பரவல் நிலை முழுமையாக கட்டுப்பாட்டுக்கு வரும் வரை மூடிவிடுவது பற்றி கவனம் செலுத்தவும்.
- விறாந்தை, பெல்கனி, வாகன தரிப்பிடம் மற்றும் இதர பொது பகுதிகளில் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கவும்.

## ஊழியர்கள் வெளியேற தயாராகும் போது

அவர்களின் பணிபுரியும் பகுதி தொற்றுநீக்கம் செய்யப்பட வேண்டும்.

தமது முகக்கவசத்தை அவர்கள் அணிய வேண்டும்.

## உணவக பகுதியில்

மொத்த கொள்ளளவு பகுதியின் 50% ஆக இருக்கை வசதியை குறைக்கவும். 1 மீற்றர் சமூக தூரப்படுத்தலை பேணுவதற்காக இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

தொற்றுப் பரவலை தவிர்ப்பதற்காக சுய-பரிமாறல் உணவு வழங்கல் பகுதிகளை மூடுவது பற்றி கவனம் செலுத்தவும்.

உணவு தயாரிப்போர் மற்றும் கையாள்வோர் எவ்வேளையிலும் கட்டாயம் சகல அவசியமான பிரத்தியேக தற்காப்பு அங்கிகளை அணிந்திருப்பதை உறுதி செய்யவும்.

உணவருந்தும் அறையில் தொற்று பரவலை தவிர்ப்பது தொடர்பான வழிகாட்டல்களுடனான சுவரொட்டிகளை காட்சிப்படுத்துவது பற்றி சிந்திக்கவும்.

## கழிவறைகளை பயன்படுத்தல்

**பின்வரும் விடயங்கள் பற்றி பணியாளர்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்:**

- கழிவறையினுள் பிரவேசிக்கும் போது, உங்கள் முழங்கையால் அல்லது மணிக்கட்டு பகுதியால் கதவை திறக்கவும் (விரல்கள் அல்லது உள்ளங்கையை பயன்படுத்துவதை தவிர்க்கவும்).
- யுரினல்களை பயன்படுத்தும் போது, சமூக தூரப்படுத்தலை பேணும் வகையில் மாற்று யுரினலை பயன்படுத்தவும்.
- யுரினலுக்கு காத்திருக்கும் போது, சமூக தூரப்படுத்தலை பேணவும். அதிகளவு நெருக்கடி இருந்தால், உட்பிரவேசிப்பதை தவிர்க்கவும்.
- கொமோட்களை பயன்படுத்தும் முன்னரும் பின்னரும் நீர் கொண்டு கொமோட்கள் கழுவவும். டிஷு கடதாசிகளை பயன்படுத்தி நீரை அகற்றவும்.
- கழிவறை பயன்பாட்டின் பின்னர் கொமோட் மூடியால் மூடிய பின்னர் ஃபிளஷ் செய்யவும். இதனூடாக திரவத்துளிகள் காற்றினுள் பிரவேசிப்பதை தவிர்க்கலாம்.
- யுரினல்கள் மற்றும் கழிவறைகளை பயன்படுத்திய பின்னர் உங்கள் கைகளை 20 செக்கன்கள் வரை சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு உரிய முறையில் கழுவிக் கொள்ளவும். கைகளை கழுவ காத்திருக்கும் போது சமூக தூரப்படுத்தலை பேணவும்.
- கழிவறையிலிருந்து வெளியே வரும் போது, கதவை உங்கள் கால்களால், முழங்கை அல்லது மணிக்கட்டு பகுதியால் (உள்ளங்கையை பயன்படுத்த வேண்டாம்) திறக்கவும். முடியாவிடின், கதவு நொப்களை திருகுவதற்கு தூய பேப்பர் டவல்களை பயன்படுத்தவும்.



# துப்புரவு செய்யும் ஊழியர்களின் பங்களிப்பு

துப்புரவு செய்யும் ஊழியர்களின் பணிகள் அவர்களின் வழமையான செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, பின்வரும் அறிவுறுத்தல்களுடன் வழிநடத்தப்பட வேண்டும்.

- துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் போதும், கழிவுகளை கையாளும் போதும், பொருத்தமான பிரத்தியேக சுயபாதுகாப்பு அங்கிகளை (முகக் கவசங்கள், கையுறைகள், கொகிள்ஸ்) பயன்படுத்த ஊக்குவிக்கவும். ஏனையவர்களுடன் ஒருபோதும் பிரத்தியேக சுயபாதுகாப்பு அங்கிகளை பகிர.
- துப்புரவு செய்தல் மற்றும் தொற்றும் நீக்கும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து, அவர்களின் பணி தொடர்பில் பதிவுகள் பேணப்பட வேண்டும்.
- அவர்களின் சுய தூய்மை தொடர்பில் விளக்கமளித்து, அவர்களின் கண்கள், மூக்கு, வாய் மற்றும் கைகளை கழிவு கையுறைகளால் அல்லது கழுவிக் கொள்ளாத கரங்களால் தொடுவதை தவிர்த்துக் கொள்வது பற்றிய பயிற்சிகளை வழங்குவது.
- கழிவுத் தொட்டிகள் எப்போதும் துப்புரவு செய்யப்பட்டு, தினசரி அகற்றப்படுவதை உறுதி செய்யவும். பொலிதின் பைகளில் எடுத்து நன்கு கட்டிய பின்னர் அவற்றை கழிவகற்றவும்.
- கழிவு அகற்றும் போது ஏற்படும் ஏதேனும் சிந்துகைகளை உடனடியாக துப்புரவு செய்ய வேண்டும்.
- சகல கழிவுத் தொட்டிகள் அல்லது கொள்கலன்களை கழுவி தொற்றுநீக்கம் செய்ய வேண்டும்.
- பயன்படுத்திய பின்னர் அழிக்கக்கூடிய அங்கிகளை (கையுறைகள், மொப் மற்றும் துடைக்கும் துணி) போன்றவற்றை பொருத்தமான பைகளில் இட்டு தொற்றுநீக்கிய பின்னர் கழிவகற்றவும். புதிய கையுறைகளை அணிந்த பின்னர் பையை கட்டவும்.
- ஆடைகளை அடிக்கடி மாற்றி அவற்றை கழுவவும்.
- கழிவறை பயன்பாட்டின் பின்னர் கொமோட் மூடியால் மூடிய பின்னர் ஃபிளஷ் செய்யவும். இதனூடாக திரவத்துளிகள் காற்றினுள் பிரவேசிப்பதை தவிர்க்கலாம்.
- கழிவறை காற்றோட்ட இயந்திரத்தை 24/7 செயலில் பேணவும்.
- சரியான காற்றோட்டத்தை பேணுவதை உறுதி செய்திட, கழிவறைகளின் ஜன்னல்களை திறப்பதை தவிர்க்கவும்.



# பயன்பாட்டு பொருட்களை சேவைக்குட்படுத்தல்

## காற்றோட்ட பகுதிகள் மற்றும் AC கட்டமைப்புகள்

- இயலுமானவரை வாயு குளிரூட்டி பயன்பாடு தவிர்க்கப்பட்டு, இயற்கை காற்றோட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- கட்டிடத்தின் காற்றோட்ட கட்டமைப்புகள் சரியாக இயங்குவதை வசதி வாய்ப்புகளை சரிபார்க்கும் நிர்வாகம் உறுதி செய்வதுடன், அவை உரிய நிலையில் தூய வாயு தரத்தை பேணும் வகையில் இயங்குவதற்காக பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இயலுமாயின், பொது பகுதிகளில் காற்றோட்டத்தை மேம்படுத்துவதுடன், கட்டிடத்தினுள் பிரவேசிக்கும் காற்றின் அளவை அதிகரிக்கவும்.
- மனிதர்களுக்கு மிகவும் பொருத்தமான ஈரப்பதன் நிலையான 40% முதல் 70% வரை பேணப்பட வேண்டும்.
- ஆவியாக்கிக் குளிரவைக்கும் இயந்திரங்கள் வெளியிலிருந்து காற்றை உள்வாங்கி, சிறந்த காற்றோட்டத்தை பேணும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.



## கழிகான் சுத்திரிப்பு பகுதி - STP மற்றும் நீர் சுத்திகரிப்பு பகுதி - WTP

- கட்டிடத்தின் நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகள் முறையாக பேணப்பட்டு, நியமங்களின் பிரகாரம் உயிர்கொல்லிகள் இடப்படுவதை வசதி வாய்ப்புகளை சரிபார்க்கும் நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும். மேலும், COVID-19 பரவல் கட்டுப்படுத்துவது தொடர்பான மேலதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- குளிர வைக்கும் டவர் சுற்றோட்டம் மற்றும் இதர நீர் பிரதான கட்டமைப்பை செயற்படுத்தும் முன்னர், பொருத்தமான நியமங்களின் அடிப்படையில் உயிர்கொல்லி துப்புரவு மற்றும் பரிசோதனை போன்றவற்றினூடாக, நியுமோனியா நோய் மற்றும் COVID-19 போன்றன தவிர்த்துக் கொள்ள முடியும்.
- கழிகான் சுத்திகரிப்பு பகுதி போன்றவற்றில் நீர் மூலங்களிலிருந்து எழக்கூடிய துர்நாற்றம் போன்றன தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.
- STP அல்லது WTP பராமரிப்பு பணிகளில் ஈடுபடும் அணியினர் N95 முகக்கவசங்கள், கொகிள்ஸ், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு பாதணிகள் போன்ற பிரத்தியேக பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் தமக்கென பிரத்தியேக பாதுகாப்பு அங்கியை கொண்டிருக்க வேண்டும்.



- பனெல் அறை/பம்பி அறை ஆகியவற்றின் பராமரிப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் அணியினர் மூகக் கவசங்கள், கையுறைகள், கொகிள்ஸ் மற்றும் பாதுகாப்பு பாதணிகள் போன்ற பிரத்தியேக பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் தமக்கென பிரத்தியேக பாதுகாப்பு அங்கியை கொண்டிருக்க வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிடையே கைமாறும் உதிரிப்பாகத்தை தொற்றுநீக்கம் செய்யவும். தொற்றுநீக்கியை பயன்படுத்தும் போது மின்சுற்றிலிருந்து அகற்றப்பட்டிருப்பதை உறுதி செய்யவும்.

## அவசர நிலைமைகளின் போது



- தீ பரவல் தொடர்பான சமிக்ஞை ஒலிக்கும் பட்சத்தில் கட்டிடத்தின் நியம விதிமுறைகளை தங்கியிருப்பவர் பின்பற்ற வேண்டும். தீப் பாதுகாப்புக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்.
- தீயின் போது வெளியேற வேண்டிய கதவுகள் எப்போதும் திறந்திருக்கக்கூடாது.
- தங்கியிருப்போருக்கு சமூக தூரப்படுத்தலை பேண ஊக்குவிப்பதுடன், சம்பவம் இடம்பெற்றால், கட்டிடத்திலிருந்து வெளியேறும் போது இயலுமானவரை 1 மீற்றர் இடைவெளியை பேணுமாறு தெரிவிக்கவும்.
- ஒன்றுகூடல் பகுதிகளில் சமூக தூரப்படுத்தலை பேணவும்.

## களஞ்சியசாலை - மூலப்பொருட்களின் உள்வருகை/வெளிச்செல்லல்:

- பொதிகள் மற்றும் தபால்களை பெறும் போது விநியோகிப்பவர் மற்றும் ஒப்பந்தக்காரரிடமிருந்து கட்டிடத்தில் தங்கியிருப்போர் சமூக தூரப்படுத்தலை பேண வேண்டும்.
- பொருள் கொண்டு வரும் சாரதி அல்லது துணையாள் தொற்று அறிகுறியை வெளிப்படுத்தினால், குறித்த வாகனம் வளாகத்தினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படக்கூடாது.
- வாகனத்தின் டயர்கள் மற்றும் மேற்பகுதி 1% சோடியம் ஹைபோகுளோரைட் ஸ்பிரே கொண்டு தொற்று நீக்கப்பட வேண்டும்.
- கைகளால் தள்ளும் ட்ரக்கள், ஸ்டாக்கர் மற்றும் ஃபோர்க்லிஃப்ட் போன்றவற்றின் தொடுகைக்குட்படும் பகுதிகள் அடிக்கடி தொற்றுநீக்கம் செய்யப்பட வேண்டும்.
- வளாகத்தினுள் பிரவேசிக்கும் ஒப்பந்தக்காரர் மற்றும் விநியோகிப்போருக்கு வளாகத்தினுள் இருக்கும் எவ்வேளையிலும் சமூக தூரப்படுத்தலை பேணுவதன் முக்கியத்துவம் தொடர்பான தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.
- விநியோகம் மற்றும் ஒப்பந்தக்காரருடன் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையை இயலுமானவரை குறைக்கவும். குறித்த பொருட் கையாளலில் ஈடுபடும் ஊழியர்களுக்கு பயன்படுத்த அற்ககோல்சார்ந்த ஹான்ட் சனிடைசர்கள் இருப்பதை உறுதி செய்யவும்.
- நேரடியாக விஜயம் செய்யும் சாரதிகள் தமது வாகனத்தில் இருக்க வேண்டும் என்பதுடன், இயலுமானவரை மொபைல் போன்ற தொடுகையற்ற முறைகளை பயன்படுத்தி ஊழியர்களுடன் தொடர்புகளை பேணலாம்.




# உணவு பாதுகாப்பு



## உணவு தயாரிக்கும் ஊழியர்கள்: பணியாற்றும் சூழலில் நபர்களுக்கிடையிலான தூரப்படுத்தல்

- தொழில் வழங்குநர்கள் இயலுமானவரை நபர்களுக்கிடையிலான தூரப்படுத்தலை நடைமுறைப்படுத்த வேண்டும். நபர்களுக்கிடையிலான தூரப்படுத்தல் தொடர்பான சுவரொட்டிகள் உணவக பகுதியில் காட்சிப்படுத்தப்படலாம்.
- COVID-19 பாதுகாப்புக்காக முகக்கவசங்கள், சிகை நெட்கள், கையுறைகள் மற்றும் காப்பு அங்கிகளை வழங்கவும்.

## உணவு கையாள்பவர்களுக்கான முன்னெச்சரிக்கைகள்

**நற் செயற்பாடுகளில் அடங்குபவை:**

முறையான கைத் தூய்மை.

சிறந்த சுவாசத் தொகுதி தூய்மை (இருமும் போது அல்லது தும்மும் போது வாய் மற்றும் மூக்கை மூடுதல், டிஷுக்களை கழிவகற்றல் மற்றும் கைகளை கழுவுதல்).

பணியாற்றும் பகுதிகள் மற்றும் கதவு கைப்பிடிகள் போன்ற மேற்பரப்புகளை அடிக்கடி துப்புரவாக்கல்/தொற்று நீக்கல்.

சமைத்த உணவுகள் மற்றும் உடனடியாக உண்ண தயார் நிலையிலுள்ள உணவுகளை கையாள உரிய கரண்டிகளை பயன்படுத்தல் மற்றும் உணவை நேரடியாக தொடுவதை தவிர்த்தல்.

உங்கள் மூக்கு, வாய் மற்றும் கூந்தலை தொடுவதை தவிர்த்தல்.

## ஊழியர் உணவக பகுதிகளில் முன்னெச்சரிக்கை

- ஊழியர்களுக்கு உணவுகளை பெற்றுக் கொள்ள மாற்று வழியின்மையால், பணியிடத்திலுள்ள உணவக பகுதிகள் திறந்திருக்க வேண்டும். கைகளை கழுவுதல் மற்றும் சுவாசத்தொகுதி தூய்மை தொடர்பான உயர் பொது சுகாதார நியமங்கள் பேணப்பட வேண்டும். ஊழியர் உணவக பகுதிகள் இயங்கும் நியமங்களில் அடங்கியிருக்க வேண்டியவை:
- இருக்கை வசதி ஏற்பாடு அடங்கலாக, தனிநபர் ஒருவர் மற்றும் இதர ஊழியர்களிடையே ஆகக்குறைந்தது 1 மீற்றர் இடைவெளியை பேணுவது.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உணவகத்தில் காணப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு மாறுபட்ட நேரத்தில் ஊழியர்களுக்கு இடைவேளையளிப்பது.
- அத்தியாவசியமற்ற உடல் தொடுகையை இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளல்.
- ஊழியர்களுக்கு பார்க்கக்கூடிய வகையிலமைந்த கைச்சுத்தம் மற்றும் தூரப்படுத்தலை பேணுவது ஊக்குவிக்கும் அறிவித்தல்கள்/சுவரொட்டிகள்.
- சாதனங்கள், வளாகங்கள், தொடுகை பகுதிகள்/அதிகம் தொடுகைக்குட்படும் மேற்பரப்புகள் போன்றவற்றை தூய்மைப்படுத்தி தொற்றுநீக்கும் செயன்முறைகள்.

## அலுவலக பேணுகை/கழிவு முகாமைத்துவம்

- தினசரி துப்புரவு செய்தல் மற்றும் தூய்மைப்படுத்தலை முன்னெடுக்க ஊழியர் குழுவொன்றை நியமிக்கவும். COVID-19 இலிருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பான பாதுகாப்பு தேவைப்பாடுகளை அவர்களுக்கு விளக்கமளிக்கவும்.
- வளாகத்தை துப்புரவாக்கும் செயற்பாட்டுக்கு உதவும் வகையில், பொருட்கள் அனைத்தும் நிலமட்டத்திலிருந்து மேலான பகுதியில் அடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
- போதியளவு பொலிதின் பைகளுடன், இறுக்கமாக மூடிக்கொள்ளக்கூடிய கால்களால் இயக்கும் கழிவுத் தொட்டிகளை சமையலறை பகுதிக்கு வழங்கவும்.
- இந்த கழிவுத் தொட்டிகள் எப்போதும் மூடிய நிலையில் இருப்பதுடன், தினசரி கழிவுகள் அகற்றப்படுவதை உறுதி செய்யவும்.
- கழிவு அகற்றும் போது ஏற்படும் ஏதேனும் சிந்துகைகளை உடனடியாக துப்புரவு செய்ய வேண்டும்.
- தினசரி கழிவு அகற்றிக் கொள்வதற்கு அங்கிகாரம் பெற்ற கழிவு அகற்றும் ஒப்பந்தக்காரர்களை ஈடுபடுத்தவும்.
- ஒவ்வொரு நாளும் வர்த்தக செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் கழிவுத் தொட்டிகள் மற்றும் குப்பை வாளிகளை கழுவி, தொற்று நீக்கம் செய்யவும்.



# COVID-19 தொற்றிலிருந்து உங்களையும் ஏனையவர்களையும் பாதுகாத்தல்



கைகளை சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு ஆகக்குறைந்தது 20 செக்கன்கள் வரை கழுவவும் அல்லது அற்ககோல் சார்ந்த ஹாண்ட் சனிடைசரை கொண்டு தொற்றுநீக்கவும்.



வீட்டிலிருந்து வெளியேறும் போது முகக் கவசம் அணியவும்.



கண்கள், மூக்கு மற்றும் வாயை தொடுவதை தவிர்க்கவும்.



தடிமன் அல்லது காய்ச்சல் அறிகுறிகளை கொண்டிருக்கும் எவருடனும் தொடர்பை ஏற்படுத்துவதை தவிர்க்கவும்.



நீங்கள் சுகயீனமடைந்தால், வீட்டில் இருக்கவும் சனநெரிசலான பகுதிகள் மற்றும் ஏனையவர்களிடமிருந்து விலகியிருக்கவும்.



தும்மல் அல்லது இருமலின் போது உங்கள் வாய் மற்றும் மூக்கை முழங்கையால் மூடி அல்லது டிஷு ஒன்றை பயன்படுத்தவும். மூடியைக் கொண்ட கழிவுத் தொட்டியினுள் பயன்படுத்திய டிஷுவை இட்டு தொட்டியை மூடவும்.



கைகுலுக்க வேண்டாம். மாறாக கை அசைவு, தலை அசைவு அல்லது புருவத்தினூடாக வரவேற்பை வெளிப்படுத்தவும்.



உங்களுக்கு காய்ச்சல், இருமல் அல்லது சுவாசிக்க பிரச்சினை இருந்தால், மருத்துவ ஆலோசனையை நாடவும். உங்களின் முன்னைய பிரயாண தகவல்களை மருத்துவ சேவை வழங்குநருடன் பகிர்ந்து கொள்ள தவற வேண்டாம்.


**மேலதிக தகவல்களுக்கு தொடர்புகளுக்கு:**
லலீந்திர விக்ரமசிங்க
சிரேஷ்ட முகாமையாளர் - இடர் பொறிக்கட்டமைப்பு
மொபைல்: 0777 238 034 | மின்னஞ்சல்: laleendraw@fairfirst.lk



**மறுதலிப்பு:** இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் உங்களையும், உங்கள் அன்புக்குவரியவர்களையும் COVID-19 இலிருந்து பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளன. இந்த ஆவணத்தின் ஏதேனும் ஒரு பகுதி தொடர்பில் அல்லது இந்த ஆவணத்தின் பிரகாரம் ஏதேனும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு உங்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் நிபுணத்துவ ஆலோசனையை நாடவும்.



**CholaMS ரிஸ்க் சேர்விசஸ் இனால் பிரசுரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.**